பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் (நிருவாகம்) – கிழக்கு மாகாணம்
නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් කාර්යාලය (පරිපාලන) - නැගෙනහිර පළාත
OFFICE OF THE DEPUTY CHIEF SECRETARY (ADMINISTRATION) - EASTERN PROVINCE

எனது இல. / මගේ අංකය. / My No. EP/02/ET01/DO/Gen

உமது இல. / ඔබේ අංකය. / Your No.

திகதி. / දිනය. / Date. 28.12.2015

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத்தலைவர்கள்,
நிறுவனத்தலைவர்கள்.

## <u>கிழக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உறுதிப்படுத்தல்</u>

2013.01.01 ஆம் திகதி கிழக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு தங்களது நிறுவனங்களில் கடமையாற்றும், நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களினை அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உறுதிப்படுத்துதல் தொடர்பாக பரிசீலிக்கும் பொருட்டு, அமைச்சு செயலாளரினால் பரிந்துரைக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களை கீழ்க் குறிக்கப்படும் ஆவணங்களுடன் எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

1. கடமையைப் பொறுப்பேற்றமைக்கான கடிதம்
2. மருத்துவ சான்றிதழ் (பொது படிவம் 169)
3. உடன்படிக்கை படிவம் (பொது படிவம் 160)
4. சத்திய பிரமாணம் (பொது படிவம் 278)
5. சொத்துப் பிரகடனம் (பொது படிவம் 261)
6. அரசியலமைப்பின் 4 ஆம், 7 ஆம் அட்டவணை.
7. ஒழுக்காற்று நடவடிக்கை சம்மந்தமாக திணைக்கள தலைவரினால் வழங்கப்பட்ட சான்றிதழ்.
8. கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை பெறுபேற்றுச் சான்றிதழ்.
9. சம்பளமற்ற மற்றும் அரைச்சம்பள விடுமுறை விபரம்.
10. வரலாற்றுத் தாள்.
11. “ஆ” மாதிரிப் படிவம்.
12. திணைக்களத்தலைவரின் சிபாரிசு (தாபனவிதிக்கோவை அத்தியாயம் II:2)
13. 1,2,3 வருடாந்த மீளாய்வு அறிக்கை

இலக்கம் 11, 12, மற்றும் 13 இன் மாதிரிப் படிவங்களினை கிழக்கு மாகாண இணையத்தள முகவரி www.ep.gov.lk இன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். மேலும் இலக்கம் 01 தொடக்கம் 06 வரையான ஆவணங்கள் எமது அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தால் மீளவும் அனுப்புவது அவசியமில்லை என்பதனை அறியத் தருகின்றேன்.

**ஏ. எச். எம். அன்ஷார்**
பிரதிப் பிரதம செயலாளர் – நிருவாகம்,
கிழக்கு மாகாணம்.

<u>பிரதி</u>

1. பிரதம செயலாளர், கிழக்கு மாகாணம்.
2. செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம்.
3. ஆளுநரின் செயலாளர், கிழக்கு மாகாணம்.

கன்னியா வீதி, வரோதய நகர்,
திருகோணமலை.

කන්නියා පාර, වරෝදය නගර්,
ත්‍රිකුණාමලය.

Kanniya Road, Varothaya Nagar,
Trincomalee.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Gen. Office I | : 026 2224049 | Deputy Chief Secretaty | : 026 2222703 | Fax | : 026 2227161 |
| Gen. Office II | : 026 2222114 | Assistant Chief Secretaty I | : 026 3269883 | Web | :www.ep.gov.lk |
| Admin Officer | : 026 3269885 | Assistant Chief Secretaty II | : 026 2222593 | E-mail | : admin@ep.gov.lk |